Date:10.03.2023

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS. 27/2018

வ.சா.1

**பெயர்-** திரு.ஆதிமூலம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் கோபி, அய்யப்பன், பாலமுருகன், எனது மனைவி கமுவம்மாள், அண்ணன் மனைவி தெய்வமதி அனைவரும் சேர்ந்து அழகப்பன் குமரார் அய்யனார்அவர்களுக்கு 3.6.2008 தேதியில் கொடுத்த கிரையப்பத்திரன் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரம் சான்றிட்ட பி.வாசா.ஆ.2. பாக்கியம் என்ற பாக்கியலட்சுமி, அசோக்குமார், செந்தில்குமார், சசிகுமார் ஆகியோர் எனக்கு 17.7.2006ல் ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். அது பிவா.சா.ஆ.3. நான் பவர் ஏஜென்ட் என்ற முறையில் எனது குமாரர்கள் கோபி, அய்யப்பன், பாலமுருகன் ஆகியோருக்கு 28.7.2006ல் ஒரு கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கிரைய உடன்படிக்கை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4. அதே சொத்தை நான் பவர் எஜென்ட் என்ற முறையில் எனது குமாரர் கோபிக்கு 13.11.2013ல் ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் வங்கியில் வைத்திருந்த அடமானத்தை ரூ.4,81,000/யை பைசல் செய்து கோபி கொடுத்தார். அதற்காக அந்த கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன். கிரையப்பத்திரத்திற்கு நான் ரொக்கமாக பணம் வாங்கவில்லை. அக்கிரிமெண்ட் போடுவதற்கு ரூ.50,000/ பணம் கோபி தான் கொடுத்தார். அக்கிரிமெண்ட் கோபி, அய்யப்பன், பாலமுருகன் பெயரில் தான் போடப்பட்டது. அது 1 ஏக்கர் 99சென்ட் சொத்தை பொருத்தது என்றால் சரிதான். அந்த சொத்தை கோபி அவரது

மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தினார் என்றால் சரிதான். கோபி, அய்யப்பன், பாலமுருகன் ஆகியோர் இடையே பாகபிரிவினை எழுதப்பட்டதா என்றால் இல்லை. கோவிந்தம்மாள் நகர் எனக்கு தெரியாது. கோவிந்தம்மாள் நகரை யார் பிளாட்போட்டு விற்றார்கள் என்றும் எனக்கு தெரியாது. கோபி சிஆர் அண்ணாதுரை என்பவரிடம் பவர் பெற்று கோவிந்தம்மாள் நகரில் உள்ள காலிமனைகள் 6 கிரையம் கொடுத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காலிமனைகளை விற்று வந்த தொகையை மூலதனமாக கொண்டு கோபி வாட்டர்பிளான்ட் நிறுவினார் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு காத்தமூத்துவிடம் இருந்து வந்த சொத்து, ஏ1 ஏ2 ஏ3 மூலம் என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் வர்ங்கிய சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் நான் சேர்த்துள்ளேன் அந்த சர்வே எண் எனக்கு நினைவில்லை. நான் என் மகள்கள், நளினி, கர்பகம் ஆகியோர் பெயரில் ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளேன். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவீல்லை. பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள கோபி, அய்யப்பன், பாலமுருகன் ஆகியோர் பெயரில் ஏற்பட்ட 17.4.2005, 13.7.2006, 2.7.2006 தேதியிட்ட கிரைய ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த பத்திரங்கள் அய்யப்பன், பாலமுருகன் ஆகியோரிடம் தான் உள்ளது. நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் அனைத்து சொத்துக்களும் இவ்வழக்கில் சேர்க்கப்படாததால் இந்த வழக்கை தள்ளுப்படி செய்யவேண்டும் என்றும், நான் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் எதுவும் செல்லத்தக்கது அல்ல என்றும், சொன்னால் சரியல்ல. அனைத்து சொத்துக்களும் கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கபட்ட சொத்துகள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை எனது மகன் கோபி என்பவரது சொல் கேட்டு தாக்கல் செய்தேன் என்றறல் சரியல்ல. என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பியததால் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பி அட்டவணை, சி அட்டவணை சொத்துக்களில் நான் பாகம் கேட்கவில்லை என்றால் எனக்கு பாகம் தேவை

என்பதால் தான் வழக்கை போட்டுள்ளேன். பிராதில் பி அட்டவணை, சி அட்டவணை சொத்துக்கள் கோபி, அய்யப்பன்,பாலமுருகன் ஆகியோருக்கு மட்டும் சமபங்காக கோரப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆ ளுக்கு 1/7பங்கு கேட்டு வழக்கு போட்டுள்ளேன். இ அட்டவணை சொத்து என்ன என்பது எனக்கு தெரியாது. பிராது நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. நான் தமிழில் விபரம் கைப்பட எழுதிக்கொடுத்தேன். பிராது தமிழில் தயார் செய்யப்பட்டதா ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியு மா என்றால் தெரியாது. என்னை இன்று ஸ்ரீதர் நீதிமன்றம் அழைத்து வந்தார் என்றால் சரிதான். இதற்கு முன்பு கோபி அழைத்து வந்துள்ளார்.